# வைத்திய போதினி.

சித்திரப் படங்களுடன் கூடிய வைத்திய சம்பந்தமான ஓர் மாதாந்தத் தமிழ் பத்திரிகை.

புத் 2. } 1911-ஞு பீப்ரவரிமீ 1உ { நெ. 2.


## ஜீரணமும், ஜீரண உருப்புகளும்.

தேகபோஷணைக்காகப்புசிக்கப்பட்ட பதார்த்தங்களை பக்குவப்படுத்தி, அதிலிருக்கிற ரஸம் ரத்தத்திற் போய்ச்சேரும்படி செய்கிற தொழிலுக்கு ஜீரணம் என்று பேர். ஜீரண உறுப்புகளாவன, வாய், பல், உமிழ்நீர்க்கோளம், மிடறு, இரைக்குழல், இரைப்பை, துணைக்குக்கி, குடல்கள், இரசாயனி, இரசதாரை, ஈரல், கணையம், ப்லீகம், இவைகள் ஜீரண உறுப்புகளாம். இவைகளில் வாய் என்பது பற்களும் சுவைக்குரிய கருவிகளுமிருக்கும ஓர் உறுப்பாம். நாவுக்கு அடியிலும் தாடையுள்ளும் காதுக்கு அடுக்கவும் பக்கத்துக்கு இரண்டாக இருக்கும் உமிழ்நீர்க்கோளங்கள் (6) ஆம். மிடறு என்பது அடிநாவிலிருந்து இரைக்குழல்மட்டும் ஓடியிருக்கிற ஓர் குழல். அது சவ்வு இளைகளாலுண்டாக்கப்பட்டதாய் மூன்று அங்குல நீளமுள்ளதாய் விசாலமுள்ளதாயிருக்கிறது. இரைக்குழல் என்பது ஒரு அடி நீளமுள்ள தடித்த ஜவ்வுக்குழலாம். அதின் வழியாய்ப் போஜனபானங்கள் இரைப்பையினுட்செல்லும். இரைப்பை (The Stomach—ஸ்டமக்) யென்பது மெல்லிய இசிவுள்ள மூன்று சவ்வுப்படலங்களால் ஆகியது. அது நெஞ்சுக்கு கீழே அடிவயிற்றிலே உடம்புக்கு நடுவாய்ச்சற்று இடப்பாகத்தில் இருக்கிறது. அம்மூன்று படலங்களில் வெளிப்படலம் சமமுள்ளதாய் மிகவும் அழுத்தமுள்ளதாயிருக்கிறது. நடுப்படலம் நுண்ணிய இழைகளால் ஆகிய இரண்டு அடுக்குள்ளது. உட்படலம் அதிக விசாலமுள்ளதாய் மெதுவானதாய் அதிக மடிப்புகளுள்ளதாய் இருக்கிறது. அம்மடிப்புகளில் சளிபரவியிருக்கிறது. அந்த மடிப்பு சிறுகுடல் பெருங்குடல்களுக்கு உள்ளுறையாய் அவைகளின் தொடர்முழுதும் ஏகமாய்ப் பரந்திருக்கிறது. மற்றொரு ஜலப்பை குண்டிக்காய் முதலியவைகளுக்கு உள்ளுறையாயிருக்கிறது.

இரசாயனி—என்பது சிறுகுடலின் உள்பக்கத்திலிருந்து கிளம்பிய சிறுகுழல்களாம். அவைகள் மணிக்குடலுக்கு ஊடாகச்சென்று இரசதாரையிலே பொருந்துகின்றது.

குடல்கள்—சிறுகுடல் பெருங்குடல் என இருவகைப்படும். அவைகள் துவாரமுள்ளது. சிறுகுடல் (Small Intestines—இன்டெஸ்டைன்ஸ்) ஏறக்குறைய 25-அடி நீளமுள்ளதாயும், தேகத்துக்கு 6 பங்கு நீண்டிருக்கும். இதில் 3 பிரிவுகளுண்டு, அவையாவன:—டியோடினம் ஜிஜூனம், இலியம் (Duodenum) துணைக்குக்ஷி. இது இரைப்பையைத்தொடர்ந்திருக்கும். 8 அல்லது 10 அங்குல நீளமுள்ளது; கிணிப்பைக்குப்பின்னுக இருக்கும்; இதில் ஏகோபித்த பித்தப்பைக்குழலும் (Common Bile duct–காமன் பயில் டக்ட்,) கணையக்குழலும், (Pancreatieduct—பான்கிரியாடிக்ட் டக்ட்) சேர்ந்துமுடிகின்றன. ஜிஜூனக்குடல் (Jejunum). இது துணைக்குக்ஷியைத் தொடர்ந்திருக்கும்; பிரேதங்களில் எப்போது மிதில்ஒன்றுமிராது. இலியக்குடல் (Ileum) இது ஜிஜூனக்குடலைத் தொடர்ந்து பெருங்குடலில் போய்முடியும், உந்திஸ்தானத்திலும், அடிவயிற்றிலும், இடைக்குழியிலும் நிறைந்திருக்கும். சிறுகுடல்களுக்குள் விருத்தமாகவும் பிறைபோலவும் இருக்கிற ஜவ்வும்டிப்புகளுக்கு (Valvulae Conniventes–வால்வியுலிகானிவேன்டிஸ்) அவைகளில் ரசாயனிகள் (Lacteals—லாக்டியல்ஸ்) பரவியிருக்கும்.

பெருங்குடல்—(Large intestines—லார்ஜ் இன்டேஸ்டைன்ஸ்) இது நீளத்தில் 5—6 அடி நீளமுள்ளதாயிருக்கும். அடிவயிறு வலது பக்கத்துப் பள்ளத்திலிருந்து (Right Iliacfossa—ரயிட் இல்லியக்பாஸா,) ஆரம்பித்து (Cæcum—ஸிக்கம்,) மேலுக்கேறி உந்திஸ்தானத்தில் குறுக்காய்ச்சென்று பிறகு இடதுபக்கமாய்க் கீழுக்கிறங்கி, இடது அடிவயிற்றுப்பள்ளத்தில் வளைந்து, திரிகஸ்தான எலும்புக்கு முன்பாக கீழுக்கிறங்கி, குதத்தில் போய்முடிகின்றது. வலது பக்கம் ஊர்த்த முகமாய் போவதற்கு, (Ascending colon—அஸ்ஸேன்டிங் கோலன்) என்றும், குறுக்காக ஓடுகிறதற்கு (Transverse colon–ட்ரான்ஸ்வர்ஸ் கோலன்,) என்றும், கீழுக்கிறங்குகிற பாகத்திற்கு (Descending colon—டிஸேன்டிங்கோலன்) என்றும், வளைவிற்கு (Sigmoid flexure—ஸிக்மாயிட் பிளக்ச்சர்) என்றும் திரிகஸ்தான எலும்புக்குமுன் இருப்பதற்கு மலக்குடல் (Rectum—ரெக்டம்) என்றும் முடிவுக்கு குதம், மலத்துவாரம், பவனவாய், ஆஸனம், அல்லது அபானம் என்றும், ஆங்கிலத்தில் (Anus—ஏனஸ்) என்றும் பேர். சிறு குடலும் பெருங் குடலும் சேருகிற விடத்தில் இரண்டு ஙவா

டங்களுண்டு அவைகளுக்கு (Ileocæcal Valves—இலியோஸிக்கல் வால்வஸ்) என்றும், ஸீக்கத்தில் நாக்குப்பூச்சிபோல் சுருண்டிருப்பதற்கு (Appendix Vermiformis—அப்பேன்டிக்ஸ் வேர்மிபார்மிஸ்) யென்றும் பேர்.

ஈரல்—மேல்வயிற்றுல் வலதுபக்கத்திலிருக்கிற உறுப்புக்கு ஈரல் என்றும் ஆங்கிலத்தில் (Liver—லிவர்) என்றும் பேர். இது ஈரல் குழியிலும் சென்றிருக்கும். தேகத்திலுள்ள உறுப்புகளுக்குள் இது பெரிது. மேற்புரம் உப்பலாயும், அடிகுடைவாயுமிருக்கும் ஏறக்குறைய 6 சேர் நிரையுண்டு, நீளத்தில் 12 அங்குலமிருக்கும், முன் ஓரம் கூர்மையாயும் பின் உருண்டுமிருக்கும். இது பக்கத்து உறுப்புகளோடு ஐவ்வால் கட்டப்பட்டிருக்கும். ஈரலுக்கடியில் பார்வையிட்டால் 5 வெடிப்புகள் காணப்படும். (Fissures—பிஷ்ஷர்ஸ்) ஒன்றில் பித்தப்பை (Gall Bladder—கால்பிளாடர்) ஒட்டிக்கொண்டிருக்கும். ஈரலுக்கு பித்தநீரைச் சுரப்பிக்கிற குணமும் கெட்ட ரக்தங்களிலிருக்கிற தோஷங்களை நீக்குகிற சக்தியும் இருக்கின்றன. பித்தநீரைக்கொண்டு போகிற குழலுக்கு யகிர்தகண்டக்குழல் (Hepatic duct—ஹிப்பாடிக்ட் டக்ட்) யென்று பேர்.

கணையம்—(Pancrcas—பான்கிரியஸ்) இது தட்டையாய் 6 அங்குல நீளமுள்ளதாய் ஏறக்குறைய 4 அவுன்ஸ் பளுவுள்ளதாய் அன்னுசயத்திற்குப் பின்புறத்தில் குறுக்காக அமைந்திருக்கும். இதன் குழல் பித்தக்குழலுடன் தொடர்ந்து, துணைகுக்ஷியில் முடியும். இந்த உறுப்பானது உமிழ்நீரைப்போன்ற ஓர் பதார்த்தத்தைச் சுரப்பிக்கின்றது. இதிலிருந்து சுறக்கப்படுகிறநீரே கொழுப்பாக மாறுகிறதென்று சிலருடைய சித்தாந்தம்.

பீலிகம்—செவுரொட்டி, அல்லது மண்ணீரல் (Spleen—ஸ்பிளீன்) இந்த உறுப்பானது சிவப்பும் நீலமும் கலந்த நிறமாய், 5 அங்குல நீளமுள்ளதாய் 6 அவுன்ஸ் பளுவுள்ளதாய் பீலிகஸ்தானத்திலிருக்கும் ஓர் உறுப்பு. இந்த உறுப்பானது ரக்தநரம்புகளால் ஏற்பட்டு, கடற்பாசியைப்போல் மிருதுவாயிருக்கும்; அழுத்தித்தொட்டால் உடைந்து போகும்; வெளிப்புறம் உப்பலாயும், உட்புறம் கொஞ்சம் குடைவாயும் தீனிப்பையோடிணைந்திருக்கும். இதின் பிரயோஜனம் இன்னும் செவ்வையாகத் தெரியவில்லை. இதிலிருந்து ஓர்வித நீரும் சுரக்கிறதில்லை. தேகம் குளிர்ந்திருக்கும்போது சருமத்திலிருக்கிற இரக்தம் இவ்வுறுப்பில் தங்கியிருக்குமென்று எண்ணப்படுகிறது. சீதஜ்வரத்தில் பீலிகம் பருத்துப்போனால் அதற்கு ஜ்வரக்கட்டி என்று சொல்வது வழக்கம்.

(தொடரும்.)

A. பெரியமூளை, betebrum. B. சிறியமூளை, cerebellum. C. முள்ளந் தண்டுக் கொடியின் சிகரம், Medella oblongata. D. முள்ளந் தண்டுக் கொடி, Spinal Marrow. E. கண்ணு Fye-Ball. 1, மேல் வாய் Upper Jaw. 2, கீழ்வாய் Lewer Jaw. 3, நாக்கு Tongue, 4, மூக்குத்துவாரங்கள், Nostrils. 5, அன்னவாகி தொண்டைக்கடியிலிருந்து இரைப்பைக்குப்போகிற குழல், Esephagus. 6. குரல்வளை, The Laryux, இதற்கு அடியிலிருப்பது சுவாஸக்குழல், Wind pipe. 7, உமிழ்நீர்க் கோளம், Partoid Gland. 8. நாக்குக்கடியிலிருக்கிற உமிழ்நீர்க்கோளம், Sublingual gland. 9, அன்னசயம், இதுவே ஆமாசயம், தீனிப்பை, இரைப்பை, The Stomach இதில் உண்ணுகிற பதார்த்தங்கள் வந்து விழுகின்றன. 10, 10 யகிர்தகண்டம், இதுவே ஈரல் அல்லது கல்லீரல், The liver பித்தத்தைச் சுரப்பிக்கிற ஓர் உறுப்பு. 11, பித்தாசயம் இதுவே பித்தப்பை The gall Bladder, இதில் பித்தநீர் இருக்கும். 13, அக்கினியாசயம் இதுவே துணைக்குக்ஷி, Duodenum. 14 கணையம், Pancreas. 15, 15, 15, 15, மலாசயம், பெருங்குடல், The Large intestines, இந்தக்குடல் மத்தியில் பாம்புபோல் வளைந்திருக்கிறது சிறுகுடல், இதுவே பக்குவாஸயம், பாசாஸயம். The small intestines. 16, சிறு குடல் பெருங்குடலோடு சேருமிடம், Gæcum. 17, பெருங் குடல் ஊர்த்த முகம் Ascending colon. 18,




அங்க அமைப்பின் அதிசயம்.

பெருங்குடல் குறுக்கு, Transverse colon. 19, பெருங்குடல் அதோமுகம், Descendirg colon. 20, குதம், Rectum. 21, பீலிகம், இதுவே மண்ணீரல், கறுப்பீரல், செவ்ரொட்டி, Spleen. 22, கழுத்து முள்ளெலும்புகள், Cervical Vertebræ.

## § பக்தியும் சங்கீதமும்.

பரந்த கடலுக்குள் பாய் விரித்தோடும் கப்பலுக்கு சுக்கான் என்னும் கருவி எப்படி வழிகாட்டியாயிருக்கிறதோ அப்படியே பக்தியின் வளர்ச்சிக்கு சங்கீதம் முக்கியமானது. சர்வசமயசமரசத்தைப்போன்ற சர்வ மனோரஞ்சிதமாய் சங்கீதமும் பக்திக்கு இன்றியமையாததாகிறது. அனேகர் சங்கீதத்தை அற்பமாய் எண்ணுகிறார்கள். இது சுத்தப்பிசகென அபிப்பிராயம். பஜனை கீர்த்தனவழிகளில் பகவானைத்துதிப்பது பலன் அதிகமாய்த்தருவதென்று பாகவதர் கொண்டாடுவதை நாம் அறிந்திருக்கிறோம். சங்கீதத்தை விரும்பாது நல்லோராயிருப்பார் சிலராயினும், சங்கீதத்தை விரும்பாதவன் மனம் பெரும்பாலும் பக்தியாகிய உணர்வுகட்குப் பண்படவில்லை என்று திடமாய்க்கூறலாம். சங்கீதத்திற்கு உருகாத மனம் கல்மனம், அஃது இரும்பாமேதவிர எளிதில் வளையும் பொன்னாகாது. இதை நோக்கியே. ஜகதலம்புகழும் ஷேக்ஸ்பியர் (Shakespere) என்னும் ஆங்கில நாடகக்கவிஞர், சங்கீதத்தில் லயிக்காதவன் கொலைத்தொழிலுக்கேற்றவன் யென்று கூறுகிறார். ("The Man that hath no Music in himself, Nor is not moved with concord of Sweet Sounds, Is fit for Treasons, Stratagems and Spoils")

சங்கீதமானது, மனிதர்களுடைய சுகானுபவங்களுக்கு இயைந்தது என்று மில்டன் (Milton) கௌபர் (Couper) என்பவரும், சித்த பரிபாகம் செய்வதற்குச் சிறந்தது என்று ரோஜர்ஸ் (Rogers) என்பவரும் ஞானபிவிர்த்திக்கு மேன்மையான கருவியென்று ஷேல்லீ (Shelly) என்பவரும், பக்திக்குப் பரமசாதனமாகுமென்று ட்ரைடன் (Dryden) என்பவரும், வெகுவாய்ப் புகழ்ந்திருக்கிறார்கள். சங்கீதம் நமக்குக்கடவுள் கொடுத்த வெகு உன்னதமான சன்மானமென்றும் அதைத்தாம் கைவிடாரென்றும் லூதர் (Luther) கூறுகிறார். சங்கீதம் பிரபஞ்சத்திற்கு ஆன்மாவைத்தந்து மனதிற்குச்சிறகு கொடுத்து, கற்பனாசக்தி விர்த்தியடையச் செய்கிறதென்றும், அது எல்லாவித நீதிகளுக்கும், நன்மைகளுக்கும், வனப்புகளுக்கும் நம்மைக்கொண்டு போய்விடுகிறதென்றும் ப்ளேடோ (Plato) புகழ்ந்து பேசுகிறார். சங்கீதம் ஒவ்வோர் வேளைகளில் நாம் பரப்பிரம்மஹத்தில் லயிக்கச்செய்கிறதென்று கார்லைல் (Carlyle) சொல்லுகிறார். சப்தஸ்வரங்களினின்றும், சங்கீதத்தில் சமர்த்தனாயிருப்பான் ஒரு புதிய உலகத்தை உண்டா

§ See The Sri Krishna Chaitanya His life and Teachings, By The T. Bhathavatsalam B.A. Page 74-75.

க்கிவிடுகின்றது என்ன விநோதம். அப்போதைக்கப்போது தோன்றி இறந்துபோகும் நாகரீகக்கோலமும், உலக ஆசாரமும் என்று அதை நினைப்பது பிசகு; ஆயின் கடவுளிடமிருந்து நமக்கு நேர்ந்த கருணையே அஃதாகுமென்று அனுமானிக்கலாம் என்று நீயூமன் (Newman) கூறுகிறார். ஹெல்ம்ஹோல்ட்ஸ் (Helmholtz) என்பவரும் அவ்விதமே அபிப்பிராயப்படுகிறார். சங்கீதத்தினால் இதுவரையில் உண்டான நன்மைகளைவிட இனிமேல் அதிகம் உண்டாகும் என்கிற கோரிக்கை நாம் வகிக்கக்கூடும் என்று லப்பக் என்பவர் வெகு நன்றாக விவரித்திருக்கிறார். (See The Pleasures of life, By the Right Hon, Sir John Lublock, Bart, M. P., F. R. S., D, C. L., L. L. D. Part II, PP. 121—141).

மேற்கூறியவையல்லாமலும் சங்கீதத்தினால் பாஷாபி விர்த்தியும் உண்டாக இடமிருக்கிறது. நாம் எழுதும் வாக்கியங்களில் இன்னோசைகாணவும், ஒன்றுக்கொன்று சந்த நெறிவழாது ஆரோகண அவரோகணக்கிரமங்கள் அழகாய்ப்பொருந்தவும், அலங்கார விசேஷங்கள் அமைந்திருக்கவும், நமக்குச்சங்கீதமே ஒப்புயர்வற்ற உன்னதத்துணையாகும். குறுகிய வாக்கியங்களிருக்கவேண்டிய இடத்தில் குறுகிய வாக்கியங்களும், நீண்டவசனங்களிருக்கவேண்டிய இடத்தில் நீண்ட வசனங்களும், ஒவ்வொரு வாக்கியத்தின் ஒவ்வொரு பாகமும் மற்றொவ்வொரு பாகத்திற்கும் சாகசமாய்ச் சமப்படுத்தப்பட்டதாகவும், எழுதவேண்டியதாயின் சங்கீதத்திற்குச் சத்துருவால் அஃதொரு போதும் ஆகாது. வெகு உற்சாகமாய் இறகு கட்டிப்பறந்து, நாலுபக்கங்களிலும் விலாசமாயுலாவி, மஹத்தான வாக்கியக்கோவைகளை மாயாதமாரியாய்ப்பொழிய அவசியமான காலங்களிலும், சங்கீத ரஸிகராயில்லாதிருந்த குறையினாலே, வெகு புத்திசாலியான சார்லஸ்லாம்ப் (Charles lamb) என்பாரும், காலில் விலங்குபூண்டார் போன்று, குறுகிய வசனங்களையே வரைந்து மடங்கி அடங்கிப்போனாரென்று டிக்வின்ஸிப் புலவர் கூறுகிறார். (*Vide* Thomas Dequincey's essay on Charles lamb).

சங்கீதம் இவ்வித சக்தியுள்ளதாயிருப்பதால், இது எல்லாச்சுப சடங்குகளிலும் பக்திக் கொண்டாட்டத்திலும் இன்றியமையாததாகிறது. பக்திக்கு ஊன்று கோலாய் நாமசங்கீர்த்தனம் ஏற்பட்ட காரணம் இதுவே! முக்தியடைய பக்தியே பரமசாதனமென்றும், சமரசமும் சங்கீதமும் அதற்கு முக்கியமாய் வேண்டியவையென்றும் நாம் இதுவரையில் சொல்லிவந்ததால் விளங்கும். இந்த பக்தியே, விசேஷிக்கும்போது கிருஷ்ணனிடம் ராதைக் குண்டான ப்ரேமை போல ஒப்பற்று உயர்வடையுமென்பதற்குச் சந்தேகமில்லை.

## ஓர் பசு மரம்.

இப்பூவுலகில் நாம் பார்த்து வருகிற செடி, கொடி, புல், பூ முதலிய தாவரவர்க்கங்களுள் அமைந்திருக்கிற ஏற்பாட்டின் அழகும், கண்ணுக்குமெட்டாத வெகு சிறிய இடத்திற்குள் அவைகளின் அங்கவுறுப்புகள் சன்னல் பின்னலாய்க் கலப்புற்று ஒவ்வொன்றும் ஒவ்வொரு தொழிலை இடையறாதும் குறித்த குறிப்பில் சாதாரணமாய் குறையாதும், நடாத்திவருவதும் பார்ப்பதற்கு எவ்வளவு அற்புதகரமாய் இருக்கிறது, கேட்கிறதற்கு எவ்வளவு வினோதந்தருகிறது, அறிவிற்கு எவ்வளவு அலுவல் கொடுக்கிறது. மேற்சொன்ன தாவரவர்க்கங்களைப்பற்றி தக்கபடி விவரணமாய்ப்பேச இங்கு முடியாதாயினும் கிருபைக்களஞ்சியமான கடவுள் தம் திருவருள்வழியாக இப்பூவுலகத்தினோர் பக்கல் உண்டாக்கியிருக்கும் ஒப்பற்ற விருக்ஷமொன்றைப்பற்றிச்சிறிது பேசிச்செல்வது, அத்தியாவசியகரமாயிருக்கிறது, தென்அமெரிகா (S. America) தேசத்தில் பாழாயுள்ள பாறையொன்றின் பக்கத்தில் உலர்ந்த இலைகளுடனும், பருத்த வேர்களுடனும், ஒரு மரம் ஓங்கிவளர்கின்றதாம். வருஷம் முந்நாற்றறுபது நாளாயினும், ஒரு நாளாவது அதற்கு மழைத்துளி காணுவது மஹா துர்லபமாம். வயிற்றிற்குக் கஞ்சியில்லாத வறியர் உடுக்கும் உடையும் பொத்தல் பொதிந்தவைகளும் அழுக்குக்கு அரசிடமுமாயிருப்பதுபோல், பானத்திற்கென்று வானத்திலிருந்து நீர்த்துளி காணாததால் அந்த மரம் மெத்த வருந்தி செத்துப்போன கிளைகளாலும் வாடிவதங்கிய இலைகளாலும் மூடப்பெற்றிருக்கின்றது. இஃதிவ்வாறாயினும், அந்த மரத்தின் அடிப்பாகத்தை பீறிடச்செய்தால், மூவாமருந்தாகிய தேவாமிர்தம் போன்று தேகத்தைப் போஷிக்கத்தக்கதும் நாவிற்கு நல்ல ருசிகொடுப்பதும் ஆகிய திவ்யமானபால் அதினின்றும் பொழிகிறதாம். சூரியோதய காலத்தில் இத்தப்பால் வெகு அபரிமிதமாகக் கிடைக்கிறதென்றும், அவ்வூர்ச் சுதேசிகள் இதைக்கொண்டுபோக கிண்ணங்களை யேந்தி நாலு மூலைகளிலிருந்தும் கூட்டமாய் ஒவ்வொரு காலையிலும் அந்த மரத்தண்டை சேருகிறார்களென்றும் ஹம்போல்ட் (Humbolt) எழுதுகிறாரென்று ஆர்கானா ஆவ்நேச்சர் என்னுங் கிரந்தமெழுதிய தாமஸ் கேரன்ஸ் எம். டி, எம், ஆர். ஸி. எஸ், எல், (Arcana of Nature by Thomas Kerns, M. D, M. R. C. S, L, P. 181) தெரிவிக்கிறார். இந்த மரத்தின் பெயரே 'பசுமரம்' என்பதாம் பச்சைமரமாயில்லாததால் அதற்குப் பசுமரமென்று பெயர் வருவதற்கு நியாயமில்லாவிடினும், பசுவைப்போன்று அது பால் தருவதால் 'பசுமரம்' என்று சொல்வதில் யாதொரு தடையுமில்லை, உலகத்

திற்கெல்லாம் மிருக ரூபமாகிய பசுவின் பால் கொடுத்துவரும் கடவுள் தம் அதியுன்னத சக்தியை விளக்கஞ்செய்வதற்கே போலும் விருக்ஷ ரூபத்தாலும் ஒரே விடத்தில் பாலளிக்கின்றனர். ஹா! ஹா! இவ்வித இயற்கை வனப்புகளின் இயல்பை யாமென்னென்று கூறுவோம்! தான் வருந்தினும் தருமஞ் செய்தல் தலைமை என்னும் உதாரகுணம் வகித்து, தனக்குப்பருக நீரில்லாவிடினும் உடுக்க நல்ல உடையில்லாவிடினும், இந்த மரமானது தினந்தோறும் பால்தானம் செய்யும் பண்பு எவ்வளவு விநோதந்தருகின்றது! எவ்வளவு பாடங்கள் கற்பிக்கின்றது. வருவாய் நீங்கிய விருக்ஷமொன்று இவ்வளவு அசாதாரணப்பலன் தருவதாயமைத்த கடவுள் பெருமை அதனினும் எவ்வளவு மேன்மையாய் நமக்குப்புலப்படுகின்றது! மேலும் சூரியோதய காலத்தில் மாத்திரம் அவ்வளவு அபரிமிதமான பால் கொடுக்க நேருவது எங்ஙனம்! உயிர்களுக்கு வன்மைதரும் உத்தமனான சூரியனுக்கு கைம்மாறு செய்வது கடமை யெனக்கருதியோ, இவ்வோரறிவுயிரான தாவரம் பாலமுது படைப்பது! இவ்விநோதம் யாதெனக்கூறுவோம்!

---

## சுகாதார விளக்கம்.

BY

**M. S. சுந்தரம் ஆசாரியார்.**

*(All Rights Reserved)*

### சுத்த ஆகாயம்.

தேக சௌக்கியம் என்பது பெறுதற்கரிய அருமையான பேறு, "நிழலினருமை வெயிலிற்றெரியும்" என்பதுபோல நோயினால் அல்லது, வேறென்றினால் தேகசுகத்தை இழந்தோர்க்கன்றி, ஏனையோர்க்கு அதன் அருமை நன்கு விளங்காது. இப் பூவுலகில் நாமெல்லோரும் தீர்க்காயுளுடனிருந்து சகல புவனபோகங்களை அநுபவித்தற்கும் சரீராரோக்கியமின்றி நிகழாதென்பது தேற்றமே. ஆதலின் யாவரும் தேகாரோக்கிய செல்வத்தை பெறுதற்கும், பெற்றபின் பேணுதற்கும் வேண்டிய சாதனங்களைக் கைக் கொள்ளுவது அவசியம். இவ்வித குறைவுகளெல்லாம் நீங்கும் பொருட்டே "ஸ்ரீமாந் சந்திரசேகர்" அவர்கள் "வைத்தியபோதினி" என்னும் பத்திரிகை வாயிலாய் சுகாதார சாஸ்திர ஞானத்தை நமது தேயத்தினருக்கு ஊட்டும் இம்மகோபகாரத்தை நாமெல்லோரும் எக்காலத்திலும் மறவாது முழுநன்றி பாராட்டக் கடமைப் பட்டவர்களேயன்றி வேறல்லவே. இத்துடன் யாமும்

எமது அநுபவத்திற்கெட்டிய சுகாதார சம்பந்தமான சில விதிகளை இப் பத்திரிகை வாயிலாய் வெளியிட வந்துள்ளோம். ஆதலின் யாவரும் இவற்றினை நன்கு கவனித்து நடக்கக் கடவார்கள்.

தேக சுகத்திற்கு முக்கியமாய்க் கவனிக்க வேண்டியவற்றுள் முதன்மை யானது சுத்த ஆகாயம், சுத்த ஜலம், ஆரோக்கியமான சாப்பாடு, மித மான் சரீரப் பயிற்சி ஆகிய இந்நான்குமேயாகும். இவைகளுள் சாப்பா டில்லாவிட்டாலும் தண்ணீரில்லாவிட்டாலும் நாம் சில தினங்களேனும் உயிரோடிருக்கக்கூடும். சுவாசமான காற்று கணப்போதேனும் இல்லா விட்டால் இறந்துவிடுவோம். ஆதலால் வாயுவே மற்றையவற்றிற் கெல்லாம் பிரதானமானது. இவ்வாயுவு பிராண வாயு, இலவண வாயு, கரிவாயு, ஜல வாயு என நான்கு வகையுண்டு. உயிருக்கு மிகவும் அவசிய ஆதாரமான வாயுவே பிராண வாயு. இப்பிராண வாயு இல்லையேல் உயிருமில்லை. ஆயினும் இவ்வாயு அதிக காரமானதால் மிகுதியாயிருப் பினுங் கெடுதியே. இவ்வாயுவின் பலத்தைக் குறைக்கச் செய்வதுவே மேல் இரண்டாவது கூறிய உப்பு வாயு. இவ்வாயு பிராணவாயுவிற்கு நேர் விரோதமானது. பிராண வாயு அதிகக் காரமுடையதால் இவை யொரு பங்கும் உப்புவாயு நான்கு பங்கும் கலந்திருந்தாலன்றி உயிருக்குக் கெடுதி. இனிப் பாழுங் கிணறுகளிலும், குழிகளிலும் அடைக்கப்பட் டிருந்து காற்றோட்டமில்லாத இருட்டு வீடுகளிலும், நாம் மூச்சுவிடுவதி னால் உள்ளே இருந்து வெளிவருவதில் உண்டாகக்கூடிய காற்றே கரி வாயு. இவ்வாயு பிராண வாயுவின் காரத்தைக் குறைக்கும். ஆயினும் புல் பூண்டு முதலிய தாவர வஸ்துக்களுக்குப் பிரயோஜனமுண்டு. இவ் வாயு ஆகாயத்தில் 2000-த்தில் ஒரு பங்கு கலந்திருந்தால் நன்று. மிகுதி யாயிருப்பிற் கெடுதியே. இனி சூரிய வெப்பத்தாலும் நெருப்பின் வெப்பத்தாலும் ஜலம் ஆவி ரூபமாகிறது. இதுவே ஜலவாயு என்பது. இதற்கு தேகம் வறட்சி யடையாமலும் தாவரங்கள் காயாமலுஞ் செய் புங்குணமுண்டு. ஜலவாயு ஆகாயத்தில் 200-பங்கில் ஒரு பங்கு கலந் திருந்தால் பிரயோஜனமுண்டு. மிகுதியாயிருப்பிற் கெடுதியே. ஆகவே சுத்த ஆகாயத்தில் பிராண வாயு 1-பங்கும் உப்பு வாயு 4-பங்கும், கரி வாயு மிகச் சிறிய பங்காய் அதாவது 2000-த்தில் 1-பங்கும், ஜல வாயு சிறிய பங்காய் அதாவது 200-ல் 1-பங்கும் கலந்திருக்கவேண்டும். அப்படி நான்கு காற்றும் சுத்த ஆகாயத்தில் அளவளவாய்க் கலந்தில்லா மல் ஏறத்தாழ இருப்பதே அசுத்த ஆகாயம் அல்லது விஷக்காற்று என்னப்படும். இவ்வசுத்தக் காற்றானது மனிதரும் பிராணிகளும் மூச்சு விடுவதாலும், நெருப்பு எரிதலாலும், பதார்த்தப் பொருள்கள் அழுகிக்

கெட்டுப்போவதாலும் மிகுதியாய் உண்டாகும். இவ்வசுத்த வாயு நமக்குண்டாகும் சர்வ ரோகங்களுக்கும் காரணம். இவ்வாயுவினாலேயே சுத்த ஆகாயம் கெடுகிறது. எப்படியெனில் மூச்சுவிடும் சுவாசத்தில் அசுத்தமான கரிவாயு, ஜலவாயு, அழுக்கான ஊத்தை இவைகள் உண்டாகின்றன. தீயெரிவதால் கரிய மலவாயு உண்டாகின்றன. ஈரமுள்ள நிலத்திற் குப்பை கூளங்கள் சம்பந்தப்படுவதால் அவை அழுகிப் பதங் கெடும்போது விஷ வாயு உண்டாகின்றன. இன்னும் சாயக்காரர்கள், கசாப்புக்கடைக்காரர்கள், தோல் பதமிடுகிறவர்களிடத்திலும், சுடுகாட்டிலும், பிணங்கள் புதைக்கும் இடத்திலும், கெட்டவாயுக்கள் உண்டாகின்றன. இவற்றினால் சுத்த ஆசாயம் கெடும் இந்த வாயுவை உட்கொண்டால் சுரநோய் உண்டாகும். இன்னும் ஜன நெருக்கத்தினால் உண்டாகும் காற்றும் விஷக்காற்றேயாகும். இதை உட்கொண்டால் மயக்கம் தலைவலி, மூர்ச்சித்தல், பேதி, வாந்தி இவைகள் உடனே காணும். எப்போதும் சுவாசிப்பவர்களுக்கு பசியின்மை, மதி மயக்கம், தூக்கமின்மை, சரீர பலவீனம் ஆகிய ரோகங்கள் பீடிக்கும். இதனாலேயே (Census) என்னும் ஜனன மரணக் கணக்கில் பெரிய நகரங்களில் மரணம் மிகுதி யென்றும கிராமங்களில் மரணம் குறைவென்றும் அறிகிறோம். காரணம் நகரங்களில் ஜனங்கள் மிகுதியாதலால் ஆகாயம் அசுத்தமாகிவிடுகின்றதி னிமித்தம் பல வியாதிகளுமுண்டாகின்றன. கிராமங்களில் ஜனக் குறைவாதலால் ஆகாயம் அசுத்தமாவதில்லை அதனால் வியாதியும் அவ்வளவதிகம் கிடையாது.

சுத்த ஆகாயத்தைக் கெடுக்கக்கூடியதும் மேல் எழுதிய காரணங்களால் உண்டாகக்கூடியதுமான கொடிய விஷக்காற்றானது சர்வ்வியாபகமாகி சர்வ சேதனங்களுக்கும் கெடுதியுண்டுபண்ணக் கூடுமென்றே எண்ணி எல்லாம் வல்ல இறைவன் தமது கருணையினால் நான்கு இயற்கைப் பிரமாணங்கள் அமைத்து இவற்றால் அவற்றை அழிக்கும்படி செய்திருக்கிறார். அவை முதலாவது விஷவாயுக்கள் உண்டாகிற இடத்தில் அதன் வேகத்தைச் சுத்த ஆகாயம் கலந்து குறைத்தல்; இரண்டாவது காற்றுகள் விஷவாயுக்களை அதிகரிக்காதபடி நீக்கி விடுதல்; மூன்றாவது தாவர வஸ்துக்கள் விஷக் காற்றை ஆகாரமாக இழுத்துக்கொள்ளுதல்; நான்காவது மழை விஷவாயுக்களைக்கொண்டு சுத்த ஆகாயத்தைக் கொடுத்தல் ஆகிய இவைகளால் அசுத்த ஆகாயம் சுத்தமாகிறது. சுத்த ஆகாயத்தினால் நாம் தேக சுகத்தையும் நோயற்ற வாழ்வையும் அடையலாம். அசுத்த ஆகாயத்தை உட்கொண்டால் பல நோய்கள் பீடிக்கும். ஆதலால் நாம் வசிக்கும் இடத்திற்கு அருகாண்மையில் விஷவாயுவை

உண்டுபண்ணும் குப்பை கூளங்களைப் போடலாகாது. மாடாடுகளைச் சமீபத்திற் கட்டக்கூடாது. சிறிய வீட்டில் அநேகர் வாழக்கூடாது. நோயாளிகள் பக்கத்திற் தூங்கக்கூடாது. வசிக்கும் வீட்டில் சுத்த ஆகாயம் புகவும் அசுத்த ஆகாயம் வெளிச் செல்லவும் சாளரங்களைப் பெரிதாகவும் மிகுதியாகவும் வைக்கவேண்டும். வீட்டையும் உடம்பையும் உடைகளையும் அசுத்தமாக்கக்கூடாது. இசகு பிசகாய் உட்கார்ந்து கொண்டும் தலை தரையில்விழக் குனிந்துகொண்டும் சுவாசிக்கக்கூடாது எப்போதும் நிமிர்ந்துகொண்டே சுவாசிக்கவேண்டும். சில (தொடரும்)

---

௨

## நேத்திர ஸம்ரக்ஷணம்.

(ஜனவரிமாத வைத்தியபோதினி 9-வது பக்கத் தொடர்ச்சி)



படுத்துக்கொண்டு வாசித்தல் வெளிச்சங் குறைவான நேரங்களில் வாசித்தல், வெண்மையானவும் பிரகாசமானவுமான வஸ்துக்களைப் பார்த்தல், மிதமிஞ்சின சம்ஸர்க்கம்செய்தல், மழையில் மொட்டைத் தலையுடன் நனைதல், லாகிரி வஸ்துக்களைக் கையாடல், முதநாளிற் சமைத்த பதார்த்தங்கள், தாமதமாய்ச் சீரணமாகிற வஸ்துக்கள் ஆகியவைகளை அதிகமாய் சாப்பிடல், மாலை நேரங்களில் வாசித்தல், எழுதுதல் கவிழ்ந்து வயிற்றின்மீது பாரத்தைப் போட்டுக்கொண்டு தூங்குதல், மூக்கிலுள்ள உரோமங்களைக்கையாற் பிடுங்கல், பழுக்காதவைகள் அல்லது சமைக்கப்படாதவைகளான பச்சைக் காய்கறி வகைகளைப் புசித்தல், புளிப்பு வஸ்துக்கள் மிளகாய் எண்ணெய் சம்பந்த பதார்த்தங்கள் ஆகியவைகளை அதிகங் கையாடிவருதல், எட்டுமணிக்கதிகமாகவும் ஆறுமணிக்குக் குறைவாகவும் நித்திரை செய்தல் இருட்டிலிருந்து வெளிச்சத்திலும் வெளிச்சத்திலிருந்து இருட்டிலும் திடீரெனச் செல்லுதல், அவசியமில்லாமலும் தக்க வைத்தியர் உத்திரவின்றியும் அழகிற்காக் கண்ணாடி போட்டுக்கொள்ளுதல், எக்காரணத்திலேனும் களைத்திருக்கும்போது வாசித்தல், ஒருவஸ்துவையே வெகுநேரம் ஊன்றியுற்றுப் பார்த்தல், புகை தூசு தும்பு முதலியவைகளிற்போதல் நெருப்புக்கெதிரில் அடிக்கடி அதிகநேரமிருத்தல் புகையிலையை அதிகமாய்ப் பாவித்தல், அடிக்கடி பேதிக்குச்சாப்பிடுதல் அடிக்கடி இரத்தங்குத்தி வாங்கிக்கொள்ளுதல், சூரியன் பக்கமாய்ப்பார்த்தல், அதிகப் பொடியான எழுத்துக்களைப் பார்த்து அடிக்கடி வாசித்தல், அதிகம் சாப்பிடுதல், அதிகம் அழுதல் அடிக்கடி பட்டினியாயிருத்தல் நோயுற்றிருக்கும்போது வாசித்தல், வாசிக்கும்போதும் எழுதும்போதும் வெளிச்சமானது எதிரில் விழுதல் இக்காலங்களில் வெளிச்சம் பின்பக்கமிருந்துவிழவேண்டும். புத்தகத்தை வெய்யலில் வைத்து வாசித்தல் அல்லது தான் வெய்யலிலிருந்துகொண்டு புத்தகத்தை நிழலில் வைத்து வாசித்தல், சிறு எழுத்து பெரு எழுத்தாகவும் பெரு எழுத்துகள் சிறு எழுத்தாகவும் விகற்ப பார்வையைக்கொடுக்கும் கண்ணாடிகளைப் போட்டுக்கொள்ளுதல், மந்தப் பிரகாசப் பார்வையைக் கொடுக்கும் கண்ணாடிகள்

நன்ருய்த் தெரியாத கண்ணுடிகள் இவைகளைப் போட்டுக்கொள்ளுதல் கண்ணிற்குக் கெடுதியை யுண்டாக்கு மாகையால் இவ்விஷயங்களைக் கூடிய வரையில் நீக்க முயலவேண்டும். இதையனுசரிப்பவர்களுக்கு கண் வியாதி யணுகாமல் கண்ணொளி முதலியவை விர்த்தியாம்.

பூ ப செல்லக்குமாரக் கவுண்டர்,
கணக்கன்பட்டி.

---

## நித்திரை.

1. நித்திரையினுல் உண்டாகும் நன்மைகள் :—சோர்வடைந்த ஒவ்வொரு அவயவங்களும் நித்திரை காலத்தில் அதிக பலத்தை அடைகின்றது. தூக்கத்தில் ஜீரணம் அதிக வேகமாய் நடக்கின்றது. தூங்கும்பொழுது தேகத்திலுள்ள விஷக் கழிவுகள் வியர்வை ரூபமாய் வெளிப்படுகின்றன. இன்னும் நித்திரையினுல் கண்களுக்கும் உடம்புக்கும் உண்டாகும் சுகத்தைச் சொல்லவொண்ணுது.

2. நித்திரையின் அளவு:—போஜனத்தை போலவே அவனவன் செய்யும் தேக உழைப்புக்கும், மனே முயற்சிக்கும் தக்கதாய் இருக்க வேண்டும். கடின உழைப்புள்ள கூலியாட்களுக்கும் படிப்பு முதலிய மனே முயற்சியுள்ளவர்களுக்கும் சிறுபிள்ளைகளுக்கும் அதிக நித்திரை வேண்டும்.

3. நித்திரைக்குத்தகுந்த காலம் :—நித்திரை செய்யத் தகுந்தது இராக்காலமே. பகலில் தூங்குகிற வழக்கத்தை நீக்கிவிடல்வேண்டும். தூங்கச்செல்லும் நேரம் இரவு ஒன்பது மணிக்கு மேற்பட்டிருக்கலாம். இரவில் நன்ருய்த் தூங்கிவிட்டு வைகறையில் எழுந்திருப்பது தேகத்துக்குச் சௌக்கியமளிப்பதோடு புத்தியையும் சீர் திருத்தும். நீடித்த சுக வாழ்நாளையும் கொடுக்கும்,

4. நித்திரையின் அவசியம்: எவ்வகைப்பிராணிகளும் இருபத்து நான்கு மணிக்கு ஒருதடவை தூங்கியே தீரவேண்டும். பகலும் இரவும் அறுபது நாழிகைக்கு ஒருவன் மனத்துணிவோடு விழித்திருக்கலாம், அதன்பின் அவனுல் கண்விழிக்கமுடியாது. தூங்கியே தீரவேண்டும். தூங்காவிட்டால் சுகமில்லை. இங்ஙனம்,

மா. வே. சோணமுத்து ஆசாரி,
மார்க்கயன்கோட்டை.

---

## வைத்தியக் குறிப்புகள்.

சூலைக்கட்டுக்கு :—சதீதனம் பலம் 1, வாலை ரசம் பலம் 5, இவற்றைக் கலுவத்திற்போட்டு சீனி பலம் 1; கூட்டி 1-விராகனிடைவீதம் இரண்டு வேளையும் 3-நாளைக்கு சாப்பிடவும், வெந்நீருஞ்சாதம் பத்தியமாயிருக்க சூலைக்கட்டு நீங்கும்.

உஷ்ண வாயுவுக்கு :—நிலாவாரை பலம் 1, பிரண்டை சூரணம் பலம் 1, கரிசாரங்கண்ணி பலம் 1, மிளகு பலம் 5, இவற்றை 1-நாள் தண்ணீரில் ஊறப்போட்டு மறுநாள் தேய்த்து

க்கழுவி ஷ வெள்ளோமிளகை சூரணம்செய்து வேளைக்கு விராகனிடை 1 வீதம் எலுமிச்சம்பழம் வெந்நீர் மோர் தேன் இவைகளில் அநுபானித்துச் சாப்பிடவும். பருப்பு பசுவின மோர், பொரிச்ச ரசம், வெந்நீர் இவை ஆகும்

ஜாதிக்காய் லேகியம்:—ஜாதிக்காய் கிராப்பு விராகனிடை 1, அபினி விராகனிடை 5, சடைக்கஞ்சா பலம் 1, சீரகம் பலம் 1, சுக்கு பலம் 1, கடுக்காய்ப்பூ பலம் 5, திப்பிலி பலம் 5, மிளகு பலம் 5, இவற்றை வறுத்து பொடி செய்யவும். கஞ்சாவை சுத்திசெய்துகொள்ளவும் எல்லாவற்றிற்கும் இரட்டிப்புச் சர்க்கரைப் பாகு பண்ணி நெய் தேன் விட்டு லேகியஞ்செய்து விராகனெடை 5, சாப்பிடவும். மூலம், கிராணி, அதிசாரங்கள், செறியேப்பம், அக்னிமந்தம், சலிதோஷம், சூடு இவைகள் தீரும்.

சகல கபால சூலைக்கும்:—மிளகு சேர் $\frac{1}{4}$, இதனை கோமூத்திரத்தில் 60-நாழிகை ஊறவைத்து, அம்மூத்திரத்தினலேயே அதனை நன்ருக அரைத்து தலைக்குத் தடவிக்கொண்டு சற்று வெய்யலில் நின்று இப்படி மூன்று நாட்கள் ஸ்நாநஞ்செய்யவும்.

சோரி சிரங்கு கரப்பானுக்கு:—சிற்றாமணக் கெண்ணெய் சேர் 1, பனங்கற்கண்டு சேர் $\frac{1}{4}$, பொடிசெய்துபோட்டு, மொந்தன் வாழைப் பழம் 2-உறித்து வில்லையாய் நறுக்கிப் போட்டுச் சூரிய புடம் வைத்து இரண்டு வேளையும் சிறு கரண்டி வீதம் சாப்பிடவும், இப்படிச் செய்ய சொரி சிரங்கு தினவுகள் தீரும்.

நூதன மருந்து:— பர்மா தேசத்தில் விஷசுரத்தினுற் பீடிக்கப்படாது குயினின் என்னும் ஔடதத்துக்குப் பதிலாக மிளகாய் சாப்பிட்டுத் தப்பித்துக்கொண்டார்களாம்.

---

## வர்த்தமானங்கள்.

---

கற்பூரம்:—இப்பொழுது கற்பூரத்தின் விலை உயர்ந்திருக்கிறது. கற்பூரம் வைத்திருப்பவர்களுக்கு கற்பூரம் இறக்கும் வழி தெரிவது அதிருஷ்டமே! இதைப்பற்றி சென்ற மார்ச்சு மாத இந்தியன் இகானமிஸ்ட் என்னும் பத்திரிகையின் 117-ம் பக்கத்தில் ஒரு வியாசம் வந்திருக்கிறது.

---

சென்னை இந்திய தென் ஆப்பிரிக்கன் லீக்:—இந்த லீக்கின் ஜாயிண்டு காரியதரிசியாகிய மிஸ்டர் G. A. நடேசன் ஹைதராபாத் நைஜாமை இந்நிதிக்குப் பணஉதவி செய்யவேணுமென்று கேட்டுக்கொண்டதின்பேரில் அவருடைய ராஜாங்க காரியதரிசி ஷ நிதிக்கு ரூ. 2500 அளித்திருப்பதாய் நிஜாம் பதில் தந்தி யடித்திருக்கிருர்.

**இந்துமதத்திற்கு திரும்பிவிட்டார்கள்:**—மிஸ்டர் குலாபாய் நிச்சாபாய் என்பவரும் அவர் மனைவியாரும் ஐந்து வருஷங்களுக்கு முன்னர் கிறிஸ்தவ மதத்தைச்சேர்ந்து, இப்போது இந்துமதத்திற்கு திரும்பிவர விருப்பங்கொண்டதால், புரோ என்னுமிடத்திலுள்ள ஆரிய சமாஜத்தார் அவர்களுக்குப் பிராயச்சித்தம் செய்துவைத்தார்கள்.

---

நியூயார்க்கில் ஒருரோகி எவ்வித ஆகாரமும் புசியாமல் நோயால் வருந்தி அநேக மருந்துகளைத்தின்றான். அவனுக்கு எதனாலும் குணம் காணவில்லை. கடைசியில் உலர்ந்த புல்லையும் ஜலத்தையும் ஆகாரமாக உட்கொண்டதில் நோய் பறந்தோடிற்று. இப்போது ஸுகதிசையிலிருக்கிறான் நல்ல வேளைவந்தால் எல்லா வியாதியும் தீரும்.

---

அமெரிக்காவில் வெள்ளை ராக்ஷதர்கள் இருப்பதாகக் கர்ண பரம்பரையாகச் சொல்லப்பட்டது. இது உண்மையேதான் என்று ஒருவர் ஆராய்ச்சி செய்து தெரிவிக்கிறார். அவர்களைக் கண்டுபிடிக்க யத்தனிக்கிறார்கள், கண்டுபிடிக்கப்பட்டால் அதன் மூலமாக அமெரிக்காவின் பூர்வ நாகரீகமும் சரித்திரமும் வெளிப்படக்கூடும். அது அதிக வியப்பு கொடுப்பதாக இருக்கக்கூடும்.

---

**ஸ்ரீ சங்கராசாரியார் பிறந்த நாள்:**—கொச்சி ராஜ்யத்தில் ஜோஸ்யரான வித்வான் சி. வி. பிச்சுவையர் ஸ்ரீ சங்கராசாரியார் பிறந்த காலத்தைத்திட்டமாய்க் குறித்திருக்கிறார். கலியில் செல்லாநின்ற 3007 அல்லது கி. பி. 805-ல் மேஷமாதம் 18-ந்தேதி திங்கட்கிழமை நாழிகை 17-25 அல்லது மணி 12-58-ல், காலடி என்னுமிடத்தில் ஜனனமாயினாரென்று நிச்சயித்திருக்கிறார்.

---

சில தேசத்து ஸ்திரீகள் மூக்கில் பெரிய துளைகளைச்செய்து குண்டலம் போன்ற ஆபரணங்களை யணிந்து கொள்வது வழக்கம். அவ்வாபரணம் பெரியதாய்த் தொங்குவதை நோக்குங்கால் ஐயோ மூக்கு அறுந்துபோமேயென்று நாம் பரிதாபப்படும்படியிருக்கும். இங்ஙனமாக, சென்ற மாதம் 14 உயன்று கராச்சியில் ஒரு ஸ்திரீ இருட்டு வேளையிற் போய்க்கொண்டிருக்கும்போது ஒரு கள்ளன் எதிரே வந்து மூக்கில் தொங்கும் நகையை வெடுக்கென்று பிடுங்கினான். நகையும் களவுபோய் மூக்கும் அறுந்து அதிலிருந்து இரத்தமும் வடிந்ததாம். வாய்த்தவிடும்போய் அடுப்பு நெருப்பும் போனதுபோலாயிற்று ஐயோ பாவம்!

---

**இந்தியாவில் பிளேக்:**—இந்தியாவில் பரவியிருக்கின்ற பிளேக்கைப்பற்றி இங்கிலாண்டில் ஒரு உபந்நியாசம் புரிந்த மிஸ்டர் ஹாப்கின் என்பவர் இந்தியாவில் எலிகளைக் கொல்வதனால் பிளேக் நின்றுவிடாதெனவும், ஜனங்களுக்குப் பிளேக் அம்மை குத்துவதனால் மிகுந்த நன்மை உண்டாகுமென்று அபிப்பிராயப்படுவதாயும் சொன்னார்.

---

சீன பஞ்சாங்கம்:—உலகத்தில் புஸ்தகளிலெல்லாம் அதிக மாக விலையாவது சீன பஞ்சாங்கங்களாகும், எண்பதுலக்ஷம் காப்பிகள் வருஷாவருஷம் அச்சடிக்கப்பட்டு ஒரு காப்பியாவது மீதியாகாமல் எல்லாம் வாங்கப்படுகின்றனவாம். அந்தப் பஞ் சாங்கத்தில் சொல்லப்பட்டவற்றிலெல்லாம் சீனர்களுக்கு அவ் வளவு பக்தி சிரத்தையும் நம்பிக்கையுமுண்டாம்.

---

அமெரிக்காவைக் கண்டுபிடிக்க கொலம்பசுக்கு நேர்ந்த செலவு 14,000-பவுனுக்கு சற்றே அதிகமானதாம் அதாவது கொலம்பஸ் கொண்டுசென்ற சைன்னிய செலவு 600-பவுன். அச்சைன்னியத்தை நடத்திய அட்மிரலுக்கு வருஷ சம்பளம் 60-பவுன். 2-கப்பல் தலைவருக்குச் சம்பளம் 40-பவுன். கூட் டத்தாருக்கு தனித்தனி மாதம் 10-ஷிலிங்கு அநக்கூடி அவ் வளவு சொற்பத்தில் அமெரிக்காவாகிய ஓர் பிரமாண்ட கண்டம் வெள்ளைக்காரர்களுக்கு கிடைக்கப்பட்டுவிட்டது. தற்காலத் திலோ சொற்ப பூமிக்கு கோடி கோடியான பணச் செலவோடு நரபலிகளெத்தனை.

---

ஒரு லெட்சப் பிரபு:—சைராக்கியூஸைச் சேர்ந்த ஜான் டன்டி என்பவர் யாதொரு கல்வித்திறமையுமில்லாமல் செருப்பு தைக்கும் வேலையிலிருந்து குதிரை வியாபாரம் செய்ய முயன்று அதில் பெருஞ்சீமானாய் வாழ்ந்து வந்தார். அவர் அமெரிக்கா வில் ஒரு பெரிய தரகராம் இவர் கொஞ்ச காலங்களுக்கு முன் னர்தான் பரலோகத்தை அடைந்தாரென அறிகிறோம். இவர் மரணத்தின் பின்னர் இவருடைய பூஸ்திதியை கணக்கிடுங் கால் இவருக்கு 2,000,000-பவுன் ஆஸ்தியிருந்ததாம். இவ் வாஸ்திக்கு ஆஸ்பதம் வியாபாரமென்றே புலப்படுகின்றமையால் வியாபாரத்தை நந்தேசவாசிகள் கைப்பற்றி தங்களது வறுமைப்பி ணின்று மீண்டு முன்னுக்கு வருவார்களென நம்புகிறோம்.

---

## விசித்திர விஷயங்கள்.

---

ஒரு சிறிய ராக்ஷஸன்:—பாரிஸ் நகரத்தில் ஒரு ராக்ஷஸப பையனிருக்கிறான். அவனது வயது 10, அவன் தலை 22-அங் குல அகலமுள்ளது. சரீரம் 150-பவுண்டு நிறையுள்ளது. கை கால்களில் 6-விரல்களிருக்கின்றனவாம்.

---

**பைஸைகிள்:**—ஜெர்மனி ராஜ்யத்திலுள்ள பிரஜைகள் 31-லக்ஷத்து 20-ஆயிரம் வண்டிகளை வைத்துக்கொண்டிருக்கின்றனர். கவர்ன்மெண்டார் வருஷமொன்றுக்கு ரூபா 1—10—0 வீதம் வரி வசூலிக்கின்றனர்களாம். இந்தியாவில் மட்டும் ஸைகிள் 1-க்கு ரூபா 6-வீதம் வசூலிப்பது ஓர் விந்தையே.

---

**109-வயது:**—சில தினங்களுக்கு முன் இரங்கூனில் ஒரு பர்மிய மாது காலஞ் சென்றார். அவர் இறக்கும்பொழுது அவருக்கு வயது 109 என்று தெரிகின்றது. இவருக்கு ஐந்து பிள்ளைகளிருக்கின்றார்கள். இந்த ஐவருள் எல்லாருக்கும் இளையவருக்கு இப்பொழுது வயது 78.

---

**ரயில் வண்டிகளுக்குத்தான் கணக்கில்லையே:**—உலகத்துக்குள் ஏற்பட்டிருக்கிற ரெயில்வே ஸ்டேஷன்களிலெல்லாம் அதிக அலுவலுள்ளது இங்கிலாந்தில் கிளாப்ஹாம் என்னும் ஜங்ஷன் ஸ்டேஷனும், தினமொன்றுக்கு ஆயிரத்துநானூறு ரெயில் வண்டித்தொடர்கள் வந்து போகின்றனவாம்.

---

**ஒரு தேனீக் கூடு:**—தென் அமெரிகாவிலுள்ள கெண்டகியென்னும் மாகாணத்தில் ஒரு தேனீக்கூடு இருக்கிறதாம். அதிலிருக்கும் ஒரு அறை மாத்திரம் நூற்றைம்பதடி உயரமும் பத்து ஏக்கரா அகலமும் உள்ளதாம். அத்தேன் கூடானது கற்பாறையினால் செய்யப்பட்டிருக்கிறது. கற்பாறையின் 4-பாகங்களிலும் சட்டை போட்டாற்போல் தேனீக்கள் கூடு கட்டிக்கொண்டிருக்கிறதாம்.

---

**புழுதி பெருக்கும் இயந்திரம்:**—லண்டன் நகரத்து வீதிகளில் புழுதி பெருக்கும்படி ஓர் மோட்டார் வண்டி இயந்திரம் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இந்த இயந்திர வண்டி ஒரு மணி நேரத்திற்குள்ளே 8-மைல் தூரம் புழுதியைப் பெருக்கி வீதிக்குத் தண்ணீர் தெளித்துச் சுத்தஞ் செய்துவிடுகின்றதாம். இப்படியே 500-பேர் நின்று ஒரு நாள் முழுதும் செய்யக்கூடிய வேலையை இந்த இயந்திர வண்டி ஒற்றையாகவே ஒரு நாளில் செய்து முடித்துவிடுகின்றதாம்.

---

**விநோதமான இரும்புப் பெட்டி:**—அமெரிக்கா தொழிற்சாலை யொன்றில் விநோதமான இரும்புப் பெட்டி யொன்று செய்யப்படுகிறது. இதன் உயரம் 10-அடியும், அகலம் 8-அடியுமாம். திருடர் அதைய ணுகித் தீண்டுமேயாது அவர்களது படம் அதிலமையும். தீண்டிய கையையும் பிடித்துக்கொள்ள

வும் ஒருவகையான காந்தசக்தியதில் அமைக்கப்பட்டிருக்கிறது. பிறகு. இச்சங்கதியைக் குறைத்து பெட்டியைத் திறக்கவும். பிடித்துக்கொண்ட கையை விடுவித்துக்கொள்ளவும் அப்பெட்டியின் சாவியில் சூத்திரம் வைக்கப்பட்டிருக்கிறது. இப்பெட்டியைச் செய்ய நேர்ந்த சிலவு 2800-பவுனும்.

உலகத்தில் பெரிய பாலம்:—இவ்வுலகத்திலுள்ள பாலங்களுக்குள் மிகப்பெரிது சீன தேசத்திலிருக்கின்றதாம். இது 23,000-அடி நீளமும், 70-அடி அகலமும், 70-அடி உயரமும், தனித்தனி 75-அடி விஸ்தாரத்துக் கிடையிலுள்ள 300-தூண்களால் தாங்கப்பட்டதுமாயிருக்கின்றது. இதற்கு அடுத்தது "மோன்ற்றீல்" என்னுமூரில் 3701 அடியும் "புறாகலி" னில் 5,989; அடியும் நீளமுள்ள பாலங்களிருக்கின்றனவாம்.

வாயு ரோகம்:—வாயுரோகத்தை வெகு சுலபாய் போக்கும் வழியை ஓர் டாக்டர் கண்டுபிடித்திருக்கிறார். ரோகிகள் அவஸ்தைப்பொறுக்க முடியாமல் தவிக்கும் வேளையில் ஷெ டாக்டர் நரம்புகளில் தேனீக்களைக் கொண்டுவந்து விடுகிறார். அவைகள் ரோகியின் இரக்தத்தைக் குடிக்கின்றன. ரோகிக்கு வலி தோன்றுகிறதில்லையாம். அதன் பிறகு ஏதோ ஒரு மருந்தினால் சுவஸ்தப்படுத்துகிறாராம். இவருடைய கியாதி எல்லோராலும் கொண்டாடப்படுகிறது.

## அரோரூட்.

அரோரூட்மாக்கிழங்கு:—(Arrowroot) இதில் கீழ் இந்தியா கிழங்கு (East Indian) என்றும், மேல் இந்தியாக் கிழங்கு (West Indian) என்றும் இரண்டு ஜினுசுண்டு. இந்திய மாதிரியில் கிழங்கு பெரிதாயும் ஜாஸ்தி நாருடையதாயு மிருக்கும். மத்திய இந்தியாவிலும், பம்பாய், சென்னை, பங்காளங்களின் மலைப்பக்கங்களிலும், வனாந்தரமாயிருக்கின்ற மத்தியமாகாணங்களிலும், தென்கன்னடத்திலும், மலையாளத்திலும், கோதாவரி ஜில்லாவின் மேல் பாகத்திலும் ஏராளமாய்ச் சாகுபடி பண்ணப்படுகின்றது. மலையாளப் பக்கங்களிலும், தென்கன்னடத்திலும் பாசனமண்ணியில் சாகுபடி பண்ணலாம். நன்றாய்ச் சாகுபடி செய்தால் கிழங்கில் அரிசிமா (Starch) யதேஷ்டமாயிருக்கும். விஷ வஸ்துக்கள் ஒன்றுமிராது, மணல்சாரி பூமிதான் சிலாக்கியம். 1879-ம்வருஷம் சைதாபேட்டை பண்ணையின் பூந்தோட்டத்தில் ¼-ஏகர் நிலம் பொறுக்கி எடுக்கப்பட்டு, நன்றாய் உழப்பட்டு, மூடுகள் இரண்டடிக்கு ஒருதரம் உண்டாக்கப்பட்டு, ஆகஸ்டு மாதத்தில் விதைக்கிழங்குகள் மூடுகளில் 1 அடி 1½-அடி வித்தியாசத்தில் புதைக்கப்பட்டு பயிர்செய்யப்பட்டன,

ஜனவரி மாதத்தில் அறுவடை ஆயிற்று. ஆகையால் இது ௱-மாதப் பயிர் என்று சொல்லலாம். இந்தக் கால் ஏகர் 986-பவுண்டு கிழங்கு கொடுத்ததாம். அதாவது ஏகர் 1-க்கு 3944 பவுண்டு ஆகிறது. இன்னுமொரு சமயத்தில் ஒரு துண்டு நிலம் ஏக்கர் 1-க்கு 7500-பவுண்டு கிழங்கு கொடுத்ததாம். 100-பவுண்டு கிழங்கு 12½-பவுண்டு அரோரூட்மா கொடுத்ததாம். முதல் துண்டில் ஏகர் 1-க்கு 493-பவுண்டு மாவும், இரண்டாவது துண்டில் 937-பவுண்டுமாகிறது. கிழங்குகளை வெட்டி எடுக்கத் தான் வேண்டும். அரோரூட்மா பவுண்டு ஒன்றுக்கு காலணு விலை ஆகிறது. மா உண்டாக்குதல்:—கிழங்கைக் கழுவி, துருவி, தூள்களோடு ஜலத்தைச் சேர்த்துக் கலக்கி ஒரு துணியினால் வடிகட்டினால் வடிகட்டின ஜலத்தில் மாவும் நீருமாயிருக்கும். மா நீரைத் தங்கவைத்தால், மா அடியில் படிந்துவிடும். இதை நன்றாய் ஜலத்தில் சுத்தப் படுத்திக் காயவைத்தால் விலைக்குத் தயாராய்விடும். இம் மாவானது சரீர போஷணைக்குறியது. ஜுரம், இருமல், சீதபேதி முதலிய நோய்க்கும் கஞ்சி காய்ச்சி கொடுக்க பத்தியத்திற்கு உதவும்

## புத்தக வரவு.

கலைமகள் அவதாரமாகிய ஒளவைப்பிராட்டி அருளிச்செய்த ஆத்திச்சூடி என்னும் அருமை நூலிற்கு பாகியார்த்தமும், ஆந்தரார்த்தமும், திருக்குறள் மேற்கோள்களுடனும், தாயுமானவர் போதாமிர்தம், பிரமகீதை, உபநிடதம், ஞானவாசிஸ்டம், ரிபுக் கீதை, சிவஞான தீபம், பெருந்திரட்டு, விவேக சூடாமணி, பகவத்கீதை, சூத சங்கிதை, வைராக்கிய தீபம், மகாராஜா துறவு முதலிய இன்னுமனேக ஞான நூற்களின் ஆதாரங்களுடனும, இன்றியமையாத இடங்கட்கு கீழ்க் குறிப்புகளும் வரையப்பட்டுள்ளதானது, ஒரு பெருஞ் சிறப்பைத் தருகின்றது இச்சிறந்த செந்தமிழ் நூல தயமூலகத்திற்குப் பெரிதும் பயனளிக்கத்தக்கது என்னலாம். இவ்வாறு நந்தமிழ் மக்கட்குப் பெரிதும் பயன்படவெண்ணி இந்நூலை வெளியிட்ட நூலாசிரியரவர்கட்கு தமிழுலகம் மிகவும் கடமைப்பட்டுள்ளது. இப்புத்தகத்தை நமக்கன்புகூர்ந்தனுப்பிய ஸ்ரீமத் முதலியார் அவர்களுக்கு நமது மனப் பூர்வமான வந்தனமளிக்கின்றோம். இப்புத்தகம் வேண்டியவர்கள், சென்னை பெரியண்ணா முதலி வீதி 56-நெ. V. வடிவேலு முதலியார் அவர்களிடம் பெற்றுக்கொள்ளவும். புத்தகம் விலை அணு 6 தான்

---

விடுகதை விடை:—சென்ற மாதப்பத்திரிகையின் 17-வது பக்கத்தில் வெளிவந்த இரண்டாவது விடுகதைக்கு விடை—

கும்பகோணம். G. S. ஞானவடிவேலு.

# ADVERTISEMENTS.

"பாலசந்திரன்"

வாராந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

ப்ரும்மஸ்ரீ மகோமகோபாத்தியாயர் வே. சாமிநாதையர் அவர்கள் முதலிய கல்விமான்களால் வியந்து கூறப்பட்டது. கொழும்பு நகரில் இதுவொன்றே ஏராளமாகச் செலவிடப்படும் சைவத் தமிழ் பத்திரிகை.

வருடக்கிரயம்.

| | | |
|---|---|---|
| உள்ளூர் | ... ... ... | 3—0—0 |
| இலங்கையின் பிறவிடங்கள், இந்தியா | ... | 4—0—0 |
| தொடுவாய்ப்பகுதி | ... ... ... | 5—0—0 |

☞ முற்பணம் கொடுக்கவேண்டியது.

M. V. PONNAMPALA PILLAI,
*No. 103, Checku Street,*
**COLOMBO.**

---

**1890-வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது.**

மருந்து குணமில்லாவிடில் பணம் வாப்சு.

யானைக் காலுக்கும் நீர்ச் சூலை முதலானவைகளுக்கும் டாக்டர் கோவின் கைகண்ட மருந்து. எவ்விதமான வியாதியையும் சொஸ்தம் பண்ண உத்தரவாதம். ஸர்டிபிகேட்டுகள் ஏராளம். ஒரு அவுன்ஸ் கொண்ட புட்டி 1-க்கு விலை ரூபா 2—8—0. 6-அவுன்ஸ் விலை ரூ 12.

Apply to:—G. BROTHERS,
*No. 218, Cornwallis Street, Calcutta.*

---

ஓம்: வந்தேமாதரம்.

## பாலசந்திர பற்பொடி.

கல்நார் பஸ்பம் முதலிய சுதேச அவுஷத முறையையும், கார்பாலிக் ஆசிட் முதலிய இங்கிலீஷ் முறையையும் அனுசரித்து தயார் செய்யப்பட்டிருக்கிறது. எவ்விதமான பல் நோயையும் தவராது தீர்த்து உறுதியாய் இருக்கும்படி செய்யக்கூடிய குணமுடையது. அநேக கனதனவான்களால் நற்சாக்ஷிபத்தி மளிக்கப்பட்டிருக்கிறது. சகல மானவர்களும் உபயோகிக்கவேண்டியதற்காக 1-அவுன்ஸ் அடங்கிய சீசா 1-க்கு அணா 2. டிஜன் 1-க்கு ரூபா 1—2—0.

ஆலங்குடி முதல்தரமான இருவாளிப்பு பாக்குவெட்டிகள் 0—3—6 முதல் கிடைக்கும். வியாபாரிகளுக்கு தகுந்தகமிஷன் கொடுக்கப்படும்.

N. A. S. Iyer F. T. S.

புரொப்ரைட்டர், பாலசந்திர டிரேடிங் ஹால்,
ஆலங்குடி, நீடாமங்கலம் *S. I. R.*

கும்பகோணம் ஆனரயிள் திவான்பகதூர் மகாகனம் பொருந்திய R. ரெகுநாதராயர் அவர்கள் C. S. I. சொல்லுகிறதாவது,

I have used this tooth powder. I found it usefull.

(Sd.) R. RAGUNATHA RAO.

## இந்து சாஸ்திராபிமானி.

இத்தலைப் பெயரிட்ட புஸ்தகமொன்று அடியில் கையொப்பமிட்டவரால் இனிய செந்தமிழ் நடையில் நவீனமாக அச்சிடப்பட்டிருக்கின்றது. இதில் இந்துமதக் கோட்பாடுகளையும் பொது நன்மைகளையும் தழுவிப் பேசுகிற அநேக உபந்நியாசங்களும் திருவாங்கூரை அரசாக்ஷி செய்த பூர்வீக அரசர்களுடைய சரித்திரங்களும் இவர்களிடம் மந்திரி வேலையில் அமர்ந்திருந்த தேர்ந்த புத்திசாலிகளாகிய மிஸ்டர் தளவாய் ராமய்யர், ஸர். டி. மாதவராவ், ஆனரபிள், ராமய்யங்கார் முதலிய மேதாவிகளின் சரித்திரங்களும் அடங்கியிருக்கின்றன. குறித்த புஸ்தகம் விலை உயர்ந்த நல்ல கிளேஸ் கடிதத்தில் முத்துக்களைப் போன்ற அக்ஷரங்களாக பொறுக்கி யெடுத்து 8 பேஜுள்ள 16-பாரத்தில் 128 பக்கம் வரை அச்சிடப்பட்டிருப்பதுமின்றி, மதரூஸ் லோகோபகாரி பத்திராதிப ரவர்களுடைய படமொன்று வைத்து அழகாக பைண்டு செய்யப்பட்டு மிருக்கின்றது. வேண்டுவோர் தங்கள் பெயர், ஊர், போஸ்டு முதலிய பூராவிலாசங்களையும் எனக்குத் தெளிவாக எழுதும் பக்ஷத்தில் போஸ்டேஜு உள்பட 6 அணா விலைக்கு கல்லிடைக் கும்மி ஸகிதம் வி. பி. மூலம் அனுப்புவேன்.

## ஆரியஜன போதினி.

இந்நூதனமான தமிழ்ப் புத்தகத்தில் இந்தியாவின் முற்கால தற்கால நிலைமைகளும், அக்காலங்களிலுள்ள அரசர்களின் ஆக்ஷி முறைகளும், கைத்தொழில் விஷயங்களும், பிராசீன மகரிஷிகளால் விதிக்கப்பட்டிருக்கின்ற தர்ம சூட்சுமங்களும், அந்நி பெஸாண்டு அம்மையவர்களின் அருமையான உபன்னியாசங்களும், தாதாபாய் நௌரோஜி இந்தியாவுக்கு உழைத்து வருகின்ற சிறந்த பெரும் முயற்சிகளும், அவரது சலத்திரமும், ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தியின் ஸத்கிருத்ய மஹிமைகளும், விவேகானந்த ஸ்வாமிகளால் உபதேசிக்கப்பட்ட வேதாந்தத்தின் கருத்துக்களும், ஸ்நாதன தர்மம் நிலைத்திருக்கும் பொருட்டு கர்னல், ஆல்காட் துரையவர்களால் செய்யப்பட்டிருக்கின்ற காரியங்களும், பாஞ்சாலி யென்னும் பதிவிரதா சிரோண்மணியை மானபங்கம் செய்ய முயன்ற துச்சாஸனன் அவமானமடைந்ததும், ராஜஸூய யாகத்தில் தர்மபுத்திரருக்கும் சிசுபாலனுக்கும் நேரிட்டவாக்கு வாதங்களும் பஞ்சாப், வங்காளம், டில்லி, பாட்னா, முதலியவைகளை யொத்த பிற விடங்களில் நவீன வியவஸாய சாஸ்திரத்தை யனுசரித்து செய்யப்படுகின்ற வியவஸாய முறைகளும், இதுபோல் இன்னும் அனேக அற்புத விஷயங்களும் அடங்கி யிருக்கின்றன. குறித்த புஸ்தகம் விலை யுயர்ந்த கிளேஸ் பேபரில் பாரம் 8 பேஜு ஸைஸில் 120 பக்கங்கள் வரை நல்ல செந்தமிழ்நடையில் எழுதப்பட்டிருக்கின்றது. இது, ஸ்ரீராம, கிருஷ்ண மூர்த்திகளின் படங்கள் ஸகிதம் பிறமத தூஷணையின்றி பல மேல் விலாசங்களுடன் ஸகல மதஸ்தர்களுக்கும் பொதுவாக இயற்றப்பட்டிருக்கின்றது. இதற்கு வி. பி. சார்ச்சுடன் விலை அணா 10. ஸிலோன் முதலிய வெளிநாடுகளுக்கு ஒரு அணா ஜாஸ்தியாகச் சார்ச்சு செய்யப்படும். வேண்டுவோர் இப்பத்திரிகையின் பெயரைக்குறிப்பிட்டு எனக்கெழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

வா. முத்துகிருஷ்ண ஐயர்,

இந்துசாஸ்திராபிமானி, கல்லிடைக்குறிச்சி, திருநெல்வேலி ஜில்லா.

## ரோமசங்காரி சோப்.

தேகத்தின் எந்தப்பாகத்திலும் இந்த ஸோப்பை உபயோகித்தால் யாதொரு கெடுதியுமின்றி ரோமங்களைச் சங்காரஞ்செய்துவிடும். 6-மாதத்திற்கு உபயோகிக்கக்கூடிய கட்டி 1-க்கு விலை 6-அணு; டெஜன் ரூ 4, வி. பி. சார்ஜ 1-முதல் 3-க்கு 4-அணு.

## ரோமப்பிசின்.

இப்பிசின் நரைத்த மயிரை இரண்டு நிமிஷத்திற்குள் பழயபடி கறுப்பாக்கிவிடும். கெடுதிசெய்யக்கூடியது ஒன்றும் இதில்கிடையாது 1-புட்டி 3-மாதத்துக்கு போதுமானது. டைரக்ஷன் மருந்துடன் அனுப்பப்படும். புட்டி 1-க்கு விலை 12-அணு; டெஜன் 1-க்கு ரூ 8. 1-முதல் 3-புட்டிக்கு வி. பி. சார்ஜ் 4-அணு.

## கார்பாலிக் டூத்பவுடர்.

இந்த பற்பொடி, வாயிலுண்டாகும் துற்நாற்றத்தைபோக்கி பல்லைச் சேர்ந்த எல்லா வியாதிகளைப்போக்கி பற்களை கெட்டிப்படுத்தும். டின் 1-க்கு 1½-அணு டெஜன் 14-அணு 1-டெஜனுக்கு வி. பி. சார்ஜ் 4-அணு,

Apply to Messrs—J. SUR & Co.,
Patent Medecine Sellers & General order suppliers,
South Sinthee Road, P. O. (V) Cossipore, Calcutta.
Agent, Lakshmivilasa Provident Institution Ld. Kumbakonam



## பற்பொடியும் பவளச்சுன்னமும்.

இந்த சஞ்சீவி யெனும் பற்பொடியானது தஞ்சைமாநகரத்தில் பரம்பரையாய் கையாண்டு வந்தது. நீடித்து அனுபோகத்திற்குவாராமல் புதைபட்டிருந்தது. இது ஓர் மஹான்களால் வெளியாகி ஜனங்களுக்கு உபகாரமாகும் பொருட்டாகவும், அனுபோகத்திற்கு ஒத்திருப்பதையும் பல பேர்கள் வேண்டுகோளின்படி வெளியிடத்துணிந்தோம். ஷை பற்பொடியை ஓர் சிட்டிகை யெடுத்து காலையிலும் மாலையிலும் பற்துலக்கி வருவதுடன் இந்த பவள புற்றினால் செய்த சுன்னத்தையும் தாம்பூலத்துடன் 12 நாள் தரித்துக்கொண்டு வந்தால் பல்லசைவு, இரத்தம் வருதல், சீழ்வருதல், புருவெட்டு, ஜீலிஜிலிப்பு, கூச்சம், நடுக்கம், எகிறில் எற்படும் துர்நாற்றம், எகிர்கரைதல், பல்லரணை முதலான ரோகயை கண்டிப்பாய் நீக்கி சுவஸ்தம் செய்வதோடு ஆயுள்பரியந்திரம் பல்விளாமல் காக்கச்செய்யும்.

| | | | |
|---|---|---|---|
| ஓர் அவுன்ஸ் கொண்ட பற்பொடி டப்பா 1-க்கு விலை | 0 | 6 | 0 |
| ஓர் பலம் கொண்ட சுன்ன டப்பா 1-க்கு விலை | 0 | 2 | 0 |

வி. பி. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

பி. ஸாம்பமூர்த்தி ஐய்யர்,
ஆயுள்வேத பண்டிதசாலை, அய்குடி போஸ்டு,
திண்டுக்கல் மார்க்கம்.



## பூரணசந்திரோதயம்.

பிரதி ஆங்கிலமீ 15உ மதுரையில் பிரசுரமாகிவரும் தமிழ் பத்திரிகை. சந்தா வருஷம் 1-க்கு ரூ 2. தனிப்பிரதி அணு 4.

ப. நாராயண அய்யர், B.A., B.L., F. T. S.
அ. ரங்கசுவாமி அய்யர், B.A., B.L., F. T. S. } பத்திராதிபர்கள்.

# ARYAN INITIATION!

OF THE

# SPIRITUAL BROTHERHOOD!!

OF THE

# INDIAN ACADEMY OF SCIENCE. !!!

Under the guidence of an Adept Master of the Brotherhood, a special Course of Lessons is now ready to initiate you into all the mysteries of LAYA and MANTRA YOGA of the Aryans giving practical methods for HINDU-HYPNOTISM; MESMERISM, TELE-PSYCHY, WILL-CULTURE, SPIRITUAL, HEALING, CLAIR-VOYANCE CALIR AUDIENCE CLAIR-SENTIENCE, SPIRIT-COMMUNATION, MEDIUMSHIP and other wonderful secrets for attracting, SUCCESS, HEALTH, SPIRITUAL POWER and Soul-Bliss, as practised by the ancient Aryan Adepts.

This Course is the first of its kind in the world and anybody knowing to READ and WRITE ENGLISH can master it and practice its teachings to a wonderful degree.

With a complete outfit and fine Diploma of Membership of the 1st degree.

Price, Rs. 10 for the first 500 enrolments. The price will be raised to Rs. 15 shortly. Persons ordering the course should send a copy of their photos along with money in ADVANCE. No V. P. System. Look sharp!

SELF-CULTURE is a Monthly Magazine and Review Issued as the official organ of the Indian Academy of Science. i: is a Journal of Inspiration devoted to Mental, Moral, Psychic, and Spiritual Culture of Man.

The subjects dealtwith therein include Mental, Psychic, Spiritual and Occult Sciences: Phrenology, Physiognomy, Practical Psychology, Spiritualism, Yoga, Theosophy, New-Thought, Vedanta Philosophy and other Esoteric Cults.

A special feature of this Journal is that we issue every month series of Practical studies and Instructions for the devolopment of the latent powers of the Body, Brain, Mind, Soul and Spirit of Man; which are much appreciated by the public at-large.

The Journal is edited & published by the far-famed Author, Writer, and Thinker–Dr. K. T. Ramasami, D. SC: PH. D; C. L. D; President The Indian Academy of Science.

The Editor has secured the assistance of an able corps of Contributors from all parts of the Civilized world. The Journal is highly spoken of by the Press and the Public at large and it circulates all round the world. You want it! You will do well to subscribe for it now! The Annual Subscription is only Rs. 3; to India; Sh. 4 or Dol. 1; Foreign.

**THE INDIAN ACADEMY OF SCIENCE,**

KIZHANATTAM, Tinnevlley, Dist. S. India.

## பி. சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

அரகஜா :—இது மற்றொரு விதமான திவ்ய சுகந்த கலவை. இதைத் தனியாகவாவது சந்தனத்துடனாவது உபயோகிக்கலாம். தேகத்தில் பூசிக்கொள்ளலாம். உடுப்புகளுக்குப் போடலாம். அதி உன்னதமான சுவாசனை. இதன் திவ்யமான பரிமளத்தை சுகித்தறிந்தவர்களால் மிகவும் புகழப்படுகிறது. ஒரு தடவை பூசின பிறகு பிரதிதினம் ஸ்நானம் செய்தாலும் 3-நாள் பரியந்தம் இதன் இன்பமான பரிமளம் தேகத்திற்றங்கிநிற்கும். விலை டப்பா 1-க்கு அணா 8. ஒன்று முதல் 12 டப்பாக்கள் வரையில் அனுப்ப வி. பி. முதலிய சிலவுகள் அணா 5 பிரத்தியேகம்.

அம்பர்:—இந்த சுகந்தத்தில் கொஞ்சமெடுத்து உடுப்புகளுக்குப் போடலாம், தேகத்திற் பூசலாம். முகத்தில் தடவி வந்தால் பருக்கள் கருப்பு புள்ளிகள், மேகப்படர், மாசு, அறிப்பு முதலியதுகள் நீங்கி முகத்திற்கு வசீகரத்தைத்தரும். வெற்றிலையில் தடவி தாம்பூலத்துடன் உபயோகித்தால் மிக்க மனோ உற்சாகத்தைத் தரும். கொஞ்சமெடுத்து வெந்நீரில் கலந்து ஸ்நானம் செய்தால் வெந்நீரெல்லாம் சுகந்த பன்னீர் வாசனையுள்ளதாகும். மனக்களிப்பையுண்டாக்கி தேக சிரமத்தையாற்றும். விலை டப்பா ஒன்றுக்கு அணா 8. ஒன்று முதல் 12-டப்பாக்கள் வரையில் அனுப்ப வி. பி. முதலிய சிலவுகள் அணா 5 பிரத்தியேகம்.

இந்தியன் பேட்டல் டஸ்டு:—அதி மனரம்மியமான சுகந்த கலவை பொட்டலம். உடுப்பு பெட்டிகளில் வைத்திருந்தால் உடைகளுக்கு மிகவும் உன்னதமான சுவாசனை ஏற்றுவதுமன்னியில், வண்டு முதலிய பூச்சிகள் துணிகளில் அணுகாமல் காக்கும். இதன் இன்பமான சுகந்தம் நெடுநாள் நிற்கும். பொட்டலம் 1-க்கு விலை அணா 4. ஒன்று முதல் 12 பொட்டலங்கள் வரையில் அனுப்ப வி. பி. சிலவுகள் அணா 5 பிரத்தியேகம்.

குறிப்பு:—இந்த இடங்களில் மலையாளம், தெலுங்கு, கன்னடம் முதலிய பாஷைகள் தெரியாததால் ஆர்டர்செய்கிறவர்கள் தயவுசெய்து தமிழிலாவது இங்கிலீஷிலாவது அடியிற்குறித்த விலாசத்துக்கு விவரமாக எழுதிப் பெற்றுக்கொள்ளக் கோருகிறேன்.

1. தாதுபுஷ்டி மருந்து:—அதன் குணத்தை எழுதி முடியாது. அனுபோகத்தால் தெரிந்துகொள்ளலாம். தாது நஷ்டம், பலஹீனம், ஆண்குறி துவளல், பசியின்மை, கண், கால் எரிவு, தேகவரக்ஷி, சீக்கிரத்தில் ஸ்கலிதம், சொப்பன ஸ்கலிதம், கை, கால், இடுப்பு முதலிய அவயவங்களில் சோர்வு, வலி, சோம்பல், மேகச்சூடு, பாண்டு, சோகை, மேக வெள்ளை, வெட்டை, நீரிழிவு, மதுமேகம், சதையடைப்பு, இன்னும் பற்பல மூத்திர ரோகங்களை போக்கும். சரீர புஷ்டி, புருஷத்தன்மை, போக சக்தி, ஜீரண சக்தி, அபரிமிதமான தாது விருத்தியையுண்டாக்கும். நீத்திருக்கும் இந்திரியத்தைக் கெட்டிப்படுத்தி போக சக்தியை அதிகரிக்கும். டப்பா 1-க்கு விலை ரூபா 2. வி. பி. சிலவு அணா 5 பிரத்தியேகம்.

பி. சுப்பராய், பரங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா.

## பி. சுப்பறுயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

2. **அக்கினி மாந்யத்திற்கு மருந்து:**—பசியின்மை, புளித்த எப்பம் நெஞ்செரிச்சல், மலச்சிக்கல், வயிற்றுவலி, வாய் நாற்றம், அஜீரணம், வயிற்றுப்பிசம், நித்திரையில்லாமை, பித்த உபத்திரவங்களை சொஸ்தப் படுத்தும். பசி தீபனமும், தேக ஆரோக்கியமும் தரும். டப்பா 1-க்கு அணா 8. வி. பி. சிலவு 1 அல்லது 2 டப்பாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

3. **பிரமேக நிவாரணி:**—எந்த காரணத்தினால் உண்டாயிருக்கும் மேக வெள்ளை, வெட்டை, நீர்குத்தல், நீர் தாரை எரிவு, சீழ், ரெத்தம் வடிதல், முதலிய வியாதிகளை ஆண் பெண் இருதாரத்தார்களுக்கும் சொஸ்தப்படுத்தும். சீசா 1-க்கு விலை ரூபா 1. வி. பி. சிலவு ஒன்று முதல் 6-சீசாக்கள் வரையில் அனுப்ப அணா 5 பிரத்தியேகம்.

4. **லக்ஷ்மீகர கஸ்தூரி மாத்திரைகள்:**—தாம்பூலம் தரிப்பவர்கள் கையிருப்பில் எப்பொழுதும் வைத்துக்கொள்ளவேண்டிய விலையுயர்ந்த வஸ்து. தந்த நோய், வாய் நாற்றம், அஜீரணம், பித்த வாய்வு இதுகள் தீரும். தாம்பூலத்துடனாவது, தனியாகவாவது சாப்பிட்டபின் 2-மாத்திரை உபயோகித்தால் எப்பேர்க்கொத்த கனத்த சாப்பாட்டையும் உடனே ஜீரணம் செய்வதுடன் வாயில் அநேக மணி நேரம் சுகந்த வாசனை யிருக்கும். பிரதிதினம் காலையில் இரண்டு மாத்திரைகள் சாப்பிட்டால் நீடித்த அக்கினி மந்தம், மலச்சிக்கல், அஜீரணத்தினாலுண்டாகும் வயற்றிழிவு, வயிற்றுநோய், நெஞ்செரிச்சல் முதலிய பற்பல வியாதிகள் தீரும். பிரசவ காலத்தில் தாய்பூலத்துடன் உபயோகித்து வந்தால் ஜன்னி கிட்ட நாடாது; ஜன்னியில் கொடுக்க ஜன்னி தீரும். இதில் லாகிரி முதலான யாதொரு அபாயகர்மான வஸ்து சேரவில்லை. காஷ்மீர் தேசத்திலிருந்து நேராக வரவழைத்த கஸ்தூரி, தங்க ரேக், பச்சை கற்பூரம் முதலிய அநேக விலைபெற்ற மருந்து சாமான்களும் வாசனை திரவியங்களும் சேர்த்து செய்யப்பட்டிருக்கிறது. தாம்பூலத்துடன் உபயோகித்தால் பச்சை கற்பூரம் முதலாகிய வாசனை வஸ்துக்கள் உபயோகிக்கவேண்டியது அனாவசியம். அறை குழந்தைகள் முதல் வயது சென்றவர்களுக்கு சளி, இருமல், காசம், காலரு, பிளேக், சுரம் முதலானவைகளுக்கு வயதுக்கும் தேகத்துக்கும் தகுந்தபடி 1-முதல் 4-மாத்திரைகள் வரையில் வெற்றிலைச் சாற்றில் கொடுக்க சுகமாகும். சீசா 1-க்கு விலை அணா 4. இந்தியாவில் 1-முதல் 12-சீசாக்கள் வரையில் அனுப்ப பாக்கிங்கு தபால் சார்சு அணா 5-ம் சிலோனுக்கு அணா 7-ம் பிரத்தியேகம்.

5. **சர்வநோய் சம்ஹாரனி:**—இத்தைலம் கொஞ்சம் தேய்த்தால் கை, கால், கணுக்களின் பிடிப்பு, வீக்கம், முடக்கம், மார்பு நோய், தலை நோய், கழுத்து நோய், பக்க சூலை, இடுப்பு நோய், குதக வலி, பார்சு வாயு, மேக வாயு முதலான இன்னும் தேகத்தில் உண்டாகும் எல்லா நோய்களையும் சீக்கிரத்தில் குணப்படுத்தும். சீசா 1-க்கு விலை ரூபா 1. வி. பி. சிலவு ஒன்று முதல் 3-சீசாக்கள் வரையில் அனுப்ப அணா 5 பிரத்தியேகம்.

பி. சுப்பறய், பரங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா.